# TACTV
## தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

<u>அபராதத் தொகை தள்ளுபடி செய்யும் திட்டம்-2017</u>

*********************

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில், அனலாக் முறையிலான ஒளிபரப்பிற்கு கேபிள் டிவி கட்டணத்தை உரிய தேதிக்குள் செலுத்தத் தவறிய உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு அபராதத் தொகை விதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், பல உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையை தள்ளுபடி செய்துவிட்டால், இந்நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய அசல் சந்தா கட்டணத்தை முழுவதுமாக ஒரே தவணையில் செலுத்திவிடுவதாக கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்நிறுவனத்தின் இயக்குநர் குழு கூட்டத்தில், உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களின் கோரிக்கை விவாதிக்கப்பட்டு சில நிபந்தனைகளுடன் அபராதத் தொகையை தள்ளுபடி செய்யலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

<u>அபராதத் தொகை தள்ளுபடி செய்யும் திட்டத்தில்<br>சேர்ந்து பயன்பெறுவதற்கான வழிமுறைகள்.</u>

1. அசல் நிலுவைத் தொகை முழுவதையும் ஒரே தவணையில் திருப்பி செலுத்தும் உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் அக்டோபர் 2017 மாதம் முடிய உள்ள அபராதத் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட்டு பயன் அடைய தகுதி வாய்ந்தவர்கள் ஆவார்கள்.

2. நிலுவையில் உள்ள அசல் சந்தா தொகை முழுவதையும் ஒரே தவணையில் ஆன்லைனில் மட்டுமே செலுத்த வேண்டும்.

3. நிலுவையில் உள்ள அசல் சந்தா தொகை முழுவதையும் 06.12.2017 முதல் 05.01.2018-க்குள் ஒரே தவணையாக செலுத்தி பயன்பெறலாம். இத்திட்டம், 06.12.2017 முதல் 05.01.2018 வரை மட்டுமே செயல்படுத்தப்படும்.

4. நிலுவையில் உள்ள அசல் சந்தா தொகை மற்றும் அபராதத் தொகை எவ்வளவு என்பது உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களின் Login-ல் தெரிவிக்கப்படும்.

**தலைமை அலுவலகம்** : துகார் டவர்ஸ், 6–வது தளம், எண்.34 (123), மார்ஷல்ஸ் சாலை, எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண்: 044-28432911, தொலை நகல் : 044-28432913,
CIN: U64204TN2007SGC064958. மின்னஞ்சல் : tactv@tactv.in

5. நிலுவையில் உள்ள அசல் சந்தா தொகையை ஒரே தவணையில் செலுத்திய உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு அபராதத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்ற சான்று ஆன்லைனில் தெரிவிக்கப்படும். மேலும், இந்நிறுவனத்தால் உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு தபால் வழியாகவும் அனுப்பிவைக்கப்படும்.

6. இந்த சலுகை ஒரே ஒரு முறை தான் வழங்கப்படும்.

எனவே, இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி அசல் நிலுவைத் தொகை முழுமையையும் ஒரே தவணையில் ஆன்லைனில் செலுத்தி அபராதத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலாண்மை இயக்குநர்